# 5. கலைக்கூடம்

## கோலாட்டம்

கும்மியாட்டம் போல் கோலாட்டமும் பெண்கள் ஒன்றுசேர்ந்து ஆடும் ஆட்டமாகும். எனினும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுவதும் உண்டு.

இவ்வாட்டத்தை ஈழத்தில் 'வசந்தன் ஆட்டம்' என்றும், கேரளத்தில் 'கோல்களி' என்றும், தமிழகத்தில் 'கோலாட்டம்' என்றும் வழங்குவர்.

இளைஞர்கள் இவ்வாட்டத்தைக் கோடைக் காலங்களில் விளையாடுவர். அப்பொழுது அவர்கள் அதற்கென்று தனியாகத் தைத்து வைத்திருக்கும் பச்சை நிறத்தினாலான அரைக்கால் சட்டையை அணிந்து கொள்வர். மேற்சட்டையும் பச்சை நிறத்தில் இருக்கும். அம் மேற்சட்டை சதுரவடிவத்தால் ஆக்கப்பட்டு ஒவ்வொரு முனையிலும் முத்துக்களாலாகிய குஞ்சரங் களும் தொங்கவிடப்பட்டிருக்கும்.

வட்டமாக நின்று கொண்டு ஒருவர் கையில் உள்ள கோலால் மற்றொருவர் கையில் உள்ள கோலைத் தட்டி ஒலியெழுப்பி ஆடுவர். அவ்வாறு ஆடும் போது ஒருவர் அடியெடுத்துப் பாட, மற்றவர்கள் அனைவரும் அவரைத் தொடர்ந்து பாடிக் கொண்டே மாறி மாறித் தட்டி ஒலியெழுப்பியவாறு ஆடுவர்.



முதலில் பாடுபவர் விரைவு என்று கூறுவதற்கு ‘சல்’ என்று சொன்னவுடன் அனைவரும் வேகமாகப் பாடிக்கொண்டே தங்கள் கோல்களை மாறி மாறித் தட்டிக் குனிந்தும், வளைந்தும் பாட்டிற்கேற்ப ஆடுவர். இவ்வாட்டத்தில் 20 பேர் முதல் 40 பேர் வரையிலும் கலந்து கொள்வர். இக்கலை சிறுகச்சிறுக மறைந்து வருகிறது

## நிகழ்ச்சி நடத்துவோம்

- கட்டுரையை வாசித்து ஒரு கோலாட்ட நிகழ்ச்சி நடத்துங்கள்.

இதோ ஒரு கோலாட்டப் பாடல்

“வேள்வி மலைக் குறத்தியரே
விபரமுள்ள வேடுவரே
கூடை சுத்தி யெடுங்களடி
குமரர் பாதம் போற்றுங்கடி!

சுமையெடுத்து வருகையிலே
சேயமுகக் கண்டனரே
சேர்ந்து மவர் பார்க்கையிலே
சூரியன் போல் தோன்றியதே

என்ன சத்தம் வாருங்கண்ணா
எல்லாம் வந்து சேருங்கண்ணா!
எழுங்களடி கொண்டு போவோம்
இருக்குதடி சேதி சொல்வோம்.”

## குறிப்பு எழுதலாம்

- உங்கள் வட்டாரத்தில் நடைபெறும் ஏதேனும் ஒரு கலையை நடத்தும் விதத்தைப் பற்றி எழுதுங்கள்.

# உயிர்க்கலை

உயிர்க்கலையான பொம்மலாட்டக் கலைஞர் திரு. சங்கரநாதன் அவர்களிடம் நடத்தப்பெற்ற நேர்காணலின் ஒரு பகுதி இது. படித்துப் பொம்மலாட்டம் பற்றி அறிந்து கொள்வோம்.

**கனிமொழி** : வணக்கம் ஐயா! இந்தக் கலையில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

**சங்கரநாதன்** : வணக்கம் குழந்தைகளே! எனக்கு அப்போது 15 வயதிருக்கும். என் தந்தையுடன் வெளியூர்களுக்குப் போவேன். அங்கு பொம்மலாட்டக் கலைஞர்கள் சொல்லும் சிறியசிறிய வேலைகளைச் செய்வேன். பொம்மலாட்டக் கலையை ஆர்வத்துடன் கற்றுக் கொண்டேன்.

**தமிழரசி** : ஐயா, உங்களுக்கு இப்போது வயது எத்தனை?

**சங்கரநாதன்** : எனக்கு 54 வயதாகிறது.

**பாபு** : பொம்மலாட்டக் கலைக்கு எத்தனை கலைஞர்கள் தேவை?

**சங்கரநாதன்** : எங்கள் குழுவில் ஆறுபேர் இருக்கிறோம். அதிகப் படியாகப் பத்துபேர் இருக்கலாம்.



**இலக்கியா** : என்னென்ன இசைக் கருவிகளைப் பயன்படுத்துகிறீர்கள்?

**சங்கரநாதன்** : ஆர்மோனியம், மிருதங்கம், ஜால்ரா, சலங்கை போன்ற வற்றைப் பயன்படுத்தறோம்.

**இளங்கோ** : ஐயா, உங்கள் குழுவில் உங்களுடைய வேலை என்ன?

**சங்கரநாதன்** : பொம்மைகளுக்குக் குரல் கொடுப்பது, பாடுவது பொம்மைகளை ஆட்டுவிப்பது போன்ற பல வேலைகளைச் செய்வேன்.

**கனிமொழி** : உங்கள் குழந்தைகள் இந்தக்கலையில் ஈடுபட்டிருக் கிறார்களா?

**சங்கரநாதன்** : ஆமாம், என்னோட மகனுக்கு ஈடுபாடு உண்டு. குழந்தைக் கதாபாத்திரங்களுக்குக் குரல் கொடுப்பது, பாடுவது, பொம்மைகளை ஆட்டுவிப்பது போன்ற வேலைகளை நன்றாகச் செய்கிறான்.

**தமிழரசி** : பழங்காலத்தில் உள்ளது போலத்தான் இப்பவும் இந்தக் கலையை நடத்துறீங்களா?

**சங்கரநாதன்** : இல்லை குழந்தைகளே! தற்காலத்திற்கு ஏற்றவாறு திரைப் படப் பாடல் மெட்டுகளையும் சேர்த்துள்ளேன். மக்கள் அவற்றை வரவேற்கவும் செய்றாங்களே!

**பாபு** : உங்களிடம் எத்தனை விதமான பொம்மைகள் உள்ளன?


**சங்கரநாதன்** : சிறியதும், பெரியதுமாக எழுபத்தைந்து பொம்மைகள் இருக்கும்.

**இலக்கியா** : பொம்மை செய்யும் முறைகளைக் கூறுங்களேன்.

**சங்கரநாதன்** : ‘ கல்யாணமுருங்கை’ என்ற மரத்திலிருந்து பொம்மை செய்யறோம். பொம்மையின் கை, கால், தலை முதலிய உறுப் புகளைத் தனித்தனியே தயார்செய்வோம். பின்பு துளைகள்இட்டு கயிறுகள் மூலமாக ஒண்ணா இணைச் சிருவோம்.

**கனிமொழி** : வெளியூர்களில் பொம்மலாட்டம் நடத்தியிருக்கிறீர்களா?

**சங்கரநாதன்** : நடத்தியிருக்கோம்.பாட்னா, மும்பை, செகந்திராபாத், தில்லி, அகமதாபாத் முதலிய இடங்களிலும், கேரளாவில்



கொச்சி முத்தமிழ் மன்ற' நவராத்திரி விழாவிலும் நடத்தியிருக்கிறோம்.

**தமிழரசி** : இந்த நிகழ்ச்சியை எத்தனை மணிநேரம் நடத்துவீர்கள்?

**சங்கரநாதன்** : சபா நிகழ்ச்சிகளில் சுமார் இரண்டரை மணி நேரமும், கோயில் நிகழ்ச்சிகளில் மூன்று மணிநேரமும் நடத்துவோம்.

**பாபு** : பொம்மலாட்டம் பற்றிக் கலைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறதா?



**சங்கரநாதன்** : தில்லியிலுள்ள கலை,கலாச்சாரக் கல்வி நிறுவனம், இக் கலையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது. இது போற்றத்தக்கது. தேய்ந்து வரும் இக்கலை புத்துயிர் பெற்றதாகவே நான் நினைக்கிறேன்.

**இலக்கியா** : நீங்கள் நடத்தும் ஆட்டங்களில், மக்களுக்கு விருப்பமானவை எவை?

**சங்கரநாதன்** : வள்ளி திருமணம், அரிச்சந்திரன் ஆட்டங்களை மக்கள் விரும்பி ரசிக்கிறாங்க.

**இளங்கோ** : மக்கள் திரைப்படங்களைப் பார்ப்பதால் இக்கலை பாதிக்கப்பட்டுள்ளதா?

**சங்கரநாதன்** : இல்லை! இல்லை! வெளிப்பார்வைக்கு அப்படி இருந்தாலும் இக்கலையை நகர்ப்புற மக்களும் விரும்பத்தான் செய்றாங்க.

**கனிமொழி** : எங்களுக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

**சங்கரநாதன்** : பொம்மலாட்டம் என்பது ஒரு புராதனக்கலை. இது அனை வரும் பார்த்து ரசிக்கக் கூடியது. குழந்தைகளான நீங்கள் இக்கலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். சிறந்த கலைஞர்களாக மாற வேண்டும்.

**அனைவரும்** : நன்றி ஐயா! போய் வருகிறோம்.

## வினா நிரல் உருவாக்குவோம்

- உங்கள் வட்டாரத்திலுள்ள கலைஞருடன் நேர்காணல் நடத்துவதற்கான வினா- நிரல் தயாரியுங்கள்.


## பொம்மைகள் செய்வோம்

- பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கான பொம்மைகள் செய்யுங்கள்.

## சொற்களைக் கண்டறிவோம்

- கீழ்வரும் தொடர்களில் அமைந்துள்ள சொற்களைக் காண்க.

- கும்மியாட்டம் > கும்மி + ஆட்டம்
- கோலாட்டம் ........................................
- இசைக்கருவி ........................................
- மேற்சட்டை ........................................
- கோடைக்காலம் ........................................




## பொருத்தமான நிறுத்தற்குறி இடுக

- நண்பர்களே சாலை விதிகளைக் கடைப்பிடியுங்கள்
- குதிரை ஏன் இப்படி உள்ளது என இராமன் கேட்டான்
- அரசனும் இராமனும் குதிரையைப் பார்க்கச் சென்றனர்.